2019 ஜூலை 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.* (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) கன்னியாகுமரி மாவட்டம், சூறாவளிக் காற்றிலிருந்து கடற்கரைக் கிராமங்களைப் பாதுகாத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் திரும்பத் திரும்ப (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் இதே பொருள் குறித்துப் பேசினால், அவையில் நாம் எவ்வளவு நேரம் அதைப் பற்றி விவாதிப்பது? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் இது சம்பந்தமாகத்தான் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் இன்று காலையிலேயே என்னிடத்தில் பேசினார். அதனால், அவருக்கு நான் அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) உங்களது பிரச்சினை என்ன? (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்தில் 48 கடற்கரைக் கிராமங்கள் உள்ளன. 50 கி.மீ. வேகத்தில் வேகமான சூறாவளிக் காற்று அடித்துக்கொண்டிருக்கின்றது. இதுகுறித்த செய்தி தற்போது டி.வி-யில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இதனால் மக்கள் அனைவரும் எப்படி வாழ்வது, எப்படி தப்பிப்பது என்ற பதட்டத்தில் உள்ளனர். வீடுகள் அனைத்தும் சேதமடைந்து கொண்டிருக்கின்றன. இது முக்கியமான பிரச்சினை. இதற்குத் தகுந்த பாதுகாப்பு கொடுப்பதற்காகத்தான் நான் இந்த அவையில்* raise *செய்கிறேன். இதனை உங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். முக்கியமாக குளச்சல், தேங்காய்ப்பட்டினம், முட்டம், கடியப்பட்டினம்,*

மேல்மிடாலம், மிடாலம், விளல்நகர், இறையுமன்துறை, பூத்துறை, தூத்தூர், வள்ளவிளை, மார்த்தாண்டம், நீரோடித்துறை போன்ற கடற்கரைக் கிராமங்கள் அழியும் நிலையில் உள்ளன. இதற்குத் தக்க பாதுகாப்புத் தேவை. நேற்றைக்கும் இந்தப் பிரச்சினை இருந்தது. இதுகுறித்த செய்தி டி.வி.-யில் ஓடிக்கொண்டிருக்கின்றது. மக்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். இதற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக உங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே இதுகுறித்து விவரமான அறிக்கையை திரு. பிரின்ஸ் அவர்கள் பெயரைக் குறிப்பிட்டே நான் இந்த அவையில் தெரிவித்தேன். அரபிக் கடலோரம்தான் அதிகமான அளவிற்குக் கடல் சீற்றம் இருக்கிறது. தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக, இயற்கைச் சூழலுக்கு மாறுபட்ட நிலையில், கடலின் சீற்றம் அதிகமாக இருப்பதால், கடல் அரிப்பு ஏற்படுகின்ற நிலை இருக்கிறது. இதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான், ரூ.116 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளைத் தொடங்கியிருக்கிறோம். உங்கள் தொகுதியில் நீரோடி முதல் மணக்குடி வரை உறுப்பினர் அவர்கள் சொன்ன அத்தனை கிராமங்களுக்கும் சேர்த்து ரூ.221 கோடி செலவில் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மேலும், ரூ.521 கோடியில் Green Climate Fund-ல் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முழுமையாக எடுக்கப்பட்டு வருகின்றன.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—
தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு,